
# அரசு கல்வியியல் கல்லூரி

குமாரபாளையம் 638 183




# ஆண்டு மலர்

2003-2004

Scanned with CamScanner

## மலர்க்குழு

**திரு. மா. ஜெகநாதன்** எம்.எஸ்ஸி., எம்.எட்., எம்.பில்., முதல்வர் (பொறுப்பு)

**திருமதி. வெ. கலைச்செல்வி** எம்.ஏ., எம்.எட்., எம்.பில்.,
(தமிழ் விரிவுரையாளர்)

**கே.முத்துக்கண்ணு** (ஆண்டு மலர் செயலர்)


Scanned with CamScanner



மாண்புமிகு தமிழக முதல்வர்

**ஜெ. ஜெயலலிதா** அவர்கள்

Scanned with CamScanner



பேரா.**மா. ஜெகநாதன்** எம்.எஸ்ஸி., எம்.எட்., எம்.பில்.,

முதல்வர் (பொறுப்பு)

Scanned with CamScanner

# அரசு கல்வியியல் கல்லூரி,

## குமாரபாளையம் - 638 183

## நாமக்கல் மாவட்டம்

## கல்லூரி ஆண்டறிக்கை

கல்லூரி ஆண்டு விழா சிறப்பு விருந்தினர் அவர்களே! பேராசிரியப் பெருமக்களே! அலுவலக அன்பர்களே! இனிய மாணவச் செல்வங்களே! உங்கள் அனைவரையும் இக்கல்லூரியின் 49-வது ஆண்டு விழா, விளையாட்டுவிழா மற்றும் அனைத்து மன்றங்களின் நிறைவு விழா ஆகிய முப்பெரும் விழாவிற்கு வரவேற்று இவ்வாண்டு அறிக்கையினை சமர்ப்பிப்பதில் பெருமை கொள்கிறேன்.

## கல்லூரி வரலாறு

இக்கல்லூரி 1955 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் பேராசியர் திரு. வி.டி.டைட்டஸ் அவர்களை முதல்வராகக் கொண்டு தொடங்கப்பெற்றது. குமாரபாளையத்திலுள்ள அரசு மேல்நிலைப்பள்ளியின் ஒரு பகுதியாக இயங்கிவந்த இக்கல்லூரி 1972 ஆம் ஆண்டில் புதியதாகக் கட்டடம் கட்டடப்பெற்றப்பின் இவ்விடத்திற்கு மாற்றப்பட்டது. இக்கல்லூரியில் 2959-ல் புலவர் பயிற்சி வகுப்பும்,1974 ஆம் ஆண்டு எம்.எட்., பகுதி நேர வகுப்பும் தொடங்கப்பெற்றன. 1982 ஆம் ஆண்டு பகுதிநேர வகுப்பாய் இருந்த எம்.எட்., பட்டவகுப்பு முழு நேர வகுப்பாக மாற்றப்பட்டது. 1990 ஆம் ஆண்டு இக்கல்லூரியில் பெண்களும் சேர்ந்து படிக்க அனுமதி வழங்கப்பட்டது. மேலும் இக்கல்லூரியின் வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும், நல்கி இக்கல்லூரி வளர உறுதுணையாயிருந்த ஜே.கே.கே. மற்றும் எஸ்.எஸ்.எம். குடும்பத்தார்க்கும், முன்னாள் முதல்வர்களுக்கும் பெரியோர்களுக்கும் இக்கல்லூரியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகின்றேன்.

## கல்லூரி-மாணவர் சேர்க்கை

இக்கல்லூரியில் பி.எட்., பட்டப்படிப்பு பயில்வதற்காக 75 மாணவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவ்வாண்டு பி.எட் வகுப்பில் சேரும் பொருட்டு 6318 மாணவ மாணவியர் விண்ணப்பித்திருந்தனர். கல்லூரிக் கல்வி இயக்குநரின் வழிகாட்டல் நெறிப்படி நுழைவுத்தேர்வு அடிப்படையில் 75 மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். அதில் ஒரு மாணவன் முனைவர் பட்டப்படிப்பிற்கு தேர்ந்தெடுக்கப்பட்டு மாற்றுச் சான்றிதழ் பெற்றுச்சென்ற காரணத்தால் தற்போது பயிலும் மாணவர்கள் எண்ணிக்கை 74 என்பது குறிப்பிடத்தக்கது. இக்கல்லூரி 1998-99 முதல் பெரியார் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்று இயங்குகிறது. மேலும் இக்கல்லூரி தேசீய ஆசிரியர் கல்விக்கழகத்தாலும் (NCTE) அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

Scanned with CamScanner

மாணவர் மன்றங்கள் :

இவ்வாண்டு கீழ்கண்ட அனைத்து மன்றங்களின் பொறுப்பாளர்கள் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டு ஒற்றுமை உணர்வோடு, பொறுப்போடு அவர்கள் செயல்பட்டு வந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

1. மாணவர் தலைவர் - ஏ. அந்தோனி பால்ராஜ்
2. மாணவர் துணைத்தலைவர் - கே.கலையரசி
3. ஆசிரியர் மன்றச்செயலர் - ஏ.அமல்ராஜ்
4. ஆசிரியர் மன்றத்துணைச்செயலர் - ஜே. வேங்கட பிரசாத்
5. விளையாட்டுத்துறைச்செயலர் - ஏ.சப்தகிரிவாசன்
6. சமூகப்பணி மன்றச்செயலர் - என். அசோக்குமார்
7. ஆண்டுமலர் செயலர் - கே. முத்துக்கண்ணு
8. கைக்கலைக் துறைச்செயலர் - கே.எம். கல்பனா
9. கேள்விக்காட்சி கல்வி செயலர் - டி.பி.சாம்ராஜேஷ்
10. பதிவேட்டுத்துறைச்செயலர் - ஜி. சிந்தியா
11. உயிரியல் துறைச் செயலர் - எம். லட்சுமணன்
12. பொருளறிவியல் துறைச் செயலர் - ஜி.கவிதா
13. கணிதத்துறைச் செயலர் - வி.கருப்புசாமி
14. ஆங்கிலத்துறைச் செயலர் - ஆர். கலைமணி
15. தமிழ்த்துறைச் செயலர் - டி.சுப்பிரமணியம்ரவி
16. வரலாற்றுத்துறைச் செயலர் - பி. தங்கவேல்
17. நூலகத்துறைச்செயலர் - கே. காமராஜ்

## கற்ப்பித்தல் பயிற்சி

இவ்வாண்டு இக்கல்லூரி மாணவர்களுக்காக உற்றுநோக்கல் மற்றும் கற்பித்தல் பயிற்சிகளுக்கு வழக்கம்போல் ஆறு வாரங்கள் ஒதுக்கப்பட்டன. இதற்கு முன் பயிற்சியாக நுண்ணிலைக் கற்பித்தல் பயிற்சி இக்கல்லூரியில் 01-09-2003 முதல் 06-09-2003 வரை வழங்கப்பட்டது. உற்றுநோக்கல் பயிற்சி 08-09-03 முதல் 12-09-03 வரையிலும், கற்பித்தல் பயிற்சி 07-11-03 முதல் 12-12-03 வரையிலும் மாணவர்களால் மேற்கொள்ளப்பட்டன. நாமக்கல் மாவட்டத்தைச் சார்ந்த அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, பள்ளிபாளையம் ,அ.பெ.மே.நிலைப்பள்ளி பள்ளிபாளையம், அரசு மேல்நிலைப்பள்ளி பல்லக்காபாளையம், அரசு ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, குமாரபாளையம், ஈரோடு மாவட்டதைச் சார்ந்த அரசு ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, பவானி, அரசுஆண்கள் மேல்நிலைப்பள்ளி சித்தோடு, அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, கவுந்தப்பாடி, அரசு மேல்நிலைப்பள்ளி தளவாய்பேட்டை ஆகிய பள்ளிகளுக்கு பயிற்சி ஆசிரியர்கள் அனுப்பப்பட்டு கற்பித்தல் பயிற்சி மேற்கொள்ளப்பட்டது. கற்பித்தல் பயிற்சியின் மூலம் பயிற்சி ஆசிரியர்களை பட்டை தீட்டிய வைரங்களாய் அறிவு ஒளிப்பெற உதவியுள்ள மாவட்ட கல்வி அலுவலர்களுக்கும், பள்ளித் தலைமையாசிரியர்கள் அனைவருக்கும் வழிகாட்டிகளாய் செயல்பட்டுள்ள ஆசிரியர்கள் அனைவருக்கும் உளம்நிறைந்த நன்றியினை உரித்தாக்கிக் கொள்கிறோம்.

Scanned with CamScanner

## ஆசிரியர் - அலுவலர் பணியேற்பு-மாற்றம்

இக்கல்லூரியின் பொருளறிவியல் துறை பேரா.மா.ஜெகநாதன் அவர்கள் பொறுப்பு முதல்வராகப் பணிப்பொறுப்பேற்று கல்லூரியின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு செவ்வனே தன்பணியினை ஆற்றி வருகிறார்.கௌரவ விரிவுரையாளர் திரு ஆர். குணசேகரன்அவர்கள் உயிரியல் துறையில் பணியாற்றி வருகிறார்.காலியாக இருந்த கண்காணிப்பாளர் பணியிடம் நிறப்பப்பெற்று திரு க.சென்னியப்பன் அவர்கள் 11-06-03 முதல் பணியாற்றி வருகிறார். திருமதி.ஜி.சகுந்தலா, இளநிலை உதவியாளர் பணி மாற்றம் பெற்றதன் பேரில் அவ்விடத்திற்கு திரு.கி.குமரேசன் அவர்கள் பணி நியமனம் செய்யப்பட்டு 23-10-03 முதல் பணிபுரிந்து வருகிறார்.

## கல்விப்பயணம்

முதல்வர் பொறுப்பு திரு மா.ஜெகநாதன் அவர்களின் உதவியுடன், திருமதி வெ.கலைச்செல்வி, தமிழ்த்துறை அவர்கள் கல்விச்சுற்றுலாவிற்கு பொறுப்பேற்று, அவர்களின் ஏற்பாட்டின் படி 19-02-04 முதல் 22-02-04 வரை கல்விப்பயணமானது மேற்கொள்ளப்பட்டது. இக்கல்விச்சுற்றுலா இரு மாநிலங்களை இணைக்கும் அளவில் அமைந்து இரண்டு தனிப்பேருந்துகளில் இன்பப்பயணம் மேற்கொள்ளப்பட்டது. குருவாயூர்,அதிரப்பள்ளி, சாவக்காடு, சோட்டாணிக்கரை, கொச்சின். திருவணந்தபுரம், கன்னியாகுமாரி இராமேஸ்வரம், திருச்செந்தூர், மதுரை என இப்பயணம் அமைந்தது இப்பயணத்தின் போது சமையல் ஆட்கள் துணையுடன் எங்களுக்குத் தேவையான உணவினை நாங்களே தயாரித்துக்கொண்டது ஆரோக்கியம் பேணும் சிறப்பு அம்சமாய் குறிப்பிடத்தக்கதாகிறது. எழிலையும், அறிவியல் தொழில் நுட்பக் காட்சிகளையும் வரலாற்றுப்பயன்மிக்க இடங்களையும் மாணவர் மனதில் பதித்து, புதிய அனுபவக் கல்வியைப் பெற உதவுவதாய் சுற்றுலா அமைந்தது. இந்த நாட்களில் இப்பணியினை மிகச்சிறப்பாக நடத்திட தூண்டுகோலாய் அமைந்த பொறுப்பு முதல்வரையும்,சுற்றுலா பொறுப்பு பேரா.வெ.கலைச்செல்வி அவர்களையும் சுற்றுலா சிறப்பாக நடந்திட உதவிய பேராசிரியர்கள் திருமதி ஆ.நூர்ஜஹான், திருமதி அ.தேவகி, நூலகர் எஸ்.மணிவண்ணன் ஆகியோர்களையும், அலுவலக ஊழியர்கள் மற்றும் சமையல் உதவியாளர்களையும் பாராட்டி மகிழ்கிறேன்.

## நூலகம்

2003-2004 ஆம் கல்வியாண்டில் நூலகத்தில் 35 புத்தகங்கள் ரூ.10,000/- தொகைக்கு அரசு நிதி ஒதுக்கீட்டிலும், யுஜிசி நிதி ஒதுக்கீட்டில் 52 புத்தகங்கள் ரூ.24,000/- வாங்கப்பட்டது. கீழ்காணும் நாளிதழ்கள், கல்வியியல் குறித்த மாத இதழ்கள் பருவ வெளியீடுகள் ரூ.2000/- தொகைக்கு வாங்கப்பட்டன.

1. NCERT PUBLICATIONS- School Science, Journal of Indian Education
2. Peropeetrics in Education - Journa of Science Education, Indian Edn. Review
3. காலைச்சுவடுகள், தமிழரசு, விஞ்ஞானச்சுடர், காலைக்கதிர் - 12 Issues
4. தினமணி, The Hindu, Employment News.

நூலகம் முற்றிலும் திறந்தமுறை(Open Access) பயனில் மாணவ, மாணவியர்கள் பயன்பாட்டிற்கு எளிதும் உதவியாக இருந்தது. இக்கல்வியாண்டில் மாணவர்கள் சுமார் 700 புத்தகங்கள் உபயோகப்படுத்தப்பட்டன. பார்வை புத்தகங்கள் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு பெரிதும் எளிதில் பயன்படுத்தம் வகையில் இருந்தது.

Scanned with CamScanner

## பிற விழாக்கள்

கல்லூரி வளாகத்தில் பொறுப்பு முதல்வர் அவர்கள் தேசியக்கொடியினை ஏற்றிக் கொண்டாடிய முதல்விழாவாக சுதந்திரதினவிழா அமைந்தது. அதனையடுத்து குடியரசு தினவிழா, இலக்கிய மன்ற தொடக்கவிழா ஆசிரியர் தினவிழா இனிதே கொண்டாடப்பட்டன. மரநடு விழாவும், மழை நீர் சேகரிப்பு முகாமும் இவ்வாண்டின் முக்கிய நிகழ்ச்சிகளாயின. அறிவியியல் தினவிழா பேரா. நல்லகுமாரசாமி எம்.இ., இயந்திரவியல் துறை, எஸ்.எஸ்.எம். பொறியியல் கல்லூரி அவர்களாள் அரிய கருத்துகள் வழங்கப்பட்டு 28-02-03 தேதியில் நடைபெற்றது.

## பாடிவாழ்க்கை

பி.எட் மாணவர்களுக்கு சமூகப்பணி-பாடிவாழ்க்கை கல்லூரி வளாகத்தில் 10-12-2003 தொடங்கி 24-12-03 வரை ஐந்து நாட்கள் சிறப்பாய் நடைபெற்றது. பாடிவாழ்க்கை தொடக்கவிழா 20-12-2003 முற்பகல் 10மணியளவில் முனைவர் பா.விஸ்வநாதன், துணைவேந்தர், ஐ.ஆர்.டி.டி. ஈரோடு அவர்களால் இனிதே தொடங்கி வைக்கப்பட்டது. பொறுப்பு முதல்வர் மா.ஜெகநாதன் அவர்கள் முதன்மைபாடி அலுவலராகவும், திருமதி அ. தேவகி கல்வியியல் துறை, துணைப்பாடி அலுவலராகவும் பொறுப்பேற்று பணியாற்றினர், மாணவ மணிகள் இந்த 5 நாட்களில் தங்களின் ஆர்வம் மிக்க உழைப்பு மற்றும் ஒத்துழைப்பினை நல்கினர். கலைநிகழ்ச்சிகளின் மூலம் தங்களின் பல்வேறு மாறுபட்ட தனித்தன்மைகளையும் வெளிப்படுத்துபவர்களாகவும் விளங்கினர். கல்லூரி வளாகப் இவர்களின் களப்பணி மூலம் களிப்படைந்தது குறிப்பிடத்தக்கது.தலைமைப்பண்பு, ஆளுமைப் பண்பு,சகிப்புத்தன்மை, சகோதரத்துவம், பொறுமை, கடமையுணர்வு, நேரந்தவறாமை, கட்டுப்பாடு ஆகியவற்றை மாணவர்கள் மனதில் விதைக்கும் வண்ணம் இப்பாடி வாழ்க்கை சிறப்புப்பெற்றது. சிறப்புப்பேச்சாளர்கள், சிறப்புரைகள் மாணவ மணிகளுக்கு வழிகாட்டும் அளவிலும், அறிவுகூட்டும் வகையிலும் அமைந்தன. பாடிவாழ்க்கை நிறைவுநாள்விழா 24-12-03 முற்பகல் 10.00 மணியளவில் முனைவர் க.அ.முருகேசன், ஈரோடு கலைக்கல்லூரி அவர்களின் இனிய சிறப்புரையோடு நிறைவுபெற்றது.

## விளையாட்டுவிழா

இக்கல்லூரியில் உடற்கல்வித்துறைக்கு ஆசிரியர் இல்லாத குறையினைப்போக்கி விளையாட்டுத் துறைக்கு பொறுப்பேற்று 26-02-2004 27-02-2004 ஆகிய இருநாட்களில் போட்டிகளில் நடத்த உதவிய திரு மு.கந்தசாமி வரலாற்றுத்துறை பேராசிரியர் அவர்களுக்கும் விளையாட்டுப்போட்டிகளில் கலந்து கொண்டு சிறப்பித்த மாணவச்செல்வங்களுக்கும் கல்லூரி சார்பில் உளமார்ந்த பாராட்டுகளை உரித்தாக்குகிறேன்.விளையாட்டுப்போட்டிகளைச்சிறப்பாக நடத்திக்கொடுத்த அரசு ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப்பள்ளி விளையாட்டு ஆசிரிய பெருமக்களுக்கும் அனுமதி அளித்த தலைமை ஆசிரியர்அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இக்கல்லூரியின் இலக்கிய மன்ற ஆண்டு நிறைவு விழா போட்டுகள் 5-03-04 மற்றும் 8-02-2004 ஆகிய நாட்களில் நடைபெற்றது மாணவ மணிகள் இப்போட்டிகளில் ஆர்வத்தோடு கலந்துகொண்டு பரிசுகளை வென்றனர். பொறுப்பாசியராக இருந்து போட்டிகளை நடத்த உதவிய திருமதி அ. தேவகி அவர்களுக்கும் பாராட்டுகளை உரித்தாக்குகிறேன்.

Scanned with CamScanner

## மாணவர் உதவித்தொகை

இக்கல்லூரியில் இவ்வாண்டில் பிற்படுத்தப்பட்டோருக்கான கல்வி உதவித்தொகை 27 பேருக்கு ரூ.41,742/-வழங்கப்பட்டது. மேலும் ரூ. 58,590/- கல்வி உதவித்தொகை விரைவில் வழங்கப்படுள்ளது. தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கான கல்வித்தொகை 2 பேருக்கு ரூ.6,902/- வழங்கப்பட்டுள்ளது மேலும் 14 பேருக்கு 54,382/- விரைவில் வழங்கப்படவுள்ளது.மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கான கல்வி உதவித்தொகை 12 பேருக்கு ரூ.2125/- வழங்கப்பட்டது.

## கல்லூரி விடுதி

இக்கல்லூரியில் மாணவ மாணவிகளுக்கான தனி விடுதிகள் உள்ளன. அனைத்து மாணவ மாணவிகளும் விடுதியிலேயே தங்கிப்படித்துவருவது கல்லூரியின் மற்றுமோர் சிறப்பாகும். ஆண் பெண் ஆகிய இருவிடுதிகளுக்கு திருமதி வெ.கலைச்செல்வி விடுதித்துணைக்காப்பாளராகச் செயலாற்றி வருகிறார். பகிர்தளிக்கும் முறையில் குறைந்த செலவில் நிறைவான சேவை செய்யப்படுகிறது. விடுதியில் மாலையில் சர்வ மதபிரார்த்தனையும் கட்டாயப்படிப்பு நேரமும் பின்பற்றப்படுவது குறிப்பிடதக்கதாகும். இங்கு பணிபுரியும் தலைமை சமையல்காரர் ராமநாதன் மற்றும் விடுதியின் ஏனைய உதவியாளர்களுக்கும் கல்லூரியின் சார்பில் பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## மாணவர்கள் பெற்ற பரிசுகள்

2003-2004 பவானி மற்றும் குமாரபாளையம் ரோட்டரி சங்கம் நடத்திய உலக ரோட்டரி சங்க நூற்றாண்டு விழாவின் போது கே.முத்துக்கண்ணு தமிழ் வி.கருப்பசாமி கணிதம் டி. சிவக்குமார் கணிதம், கே. வித்யா வரலாறு ஆகிய மாணவ மாணவிகளுக்கு,APPRECIATION AWARD வழங்கப்பட்டது. பொறுப்பு முதல்வர் எம். ஜெகநாதன் அவர்களுக்கு 2003-2004 APPRECIATION AWARD for good vocational Service பரிசு வழங்கப்பட்டது சிறப்பிற்குரியதாகும்.

## கல்லூரி கண்ட வளர்ச்சி

இக்கல்லூரியின் ஆக்கப்பணிகளில் கீழ்கண்ட பணிகள் குறிப்பிடத்தக்கவாகின்றன.

1. பெற்றோர் ஆசிரியர் கழகம் மூலம் கல்லூரியைச்சுற்றி பாதுகாப்பு கம்பிவேலி போடப்பட்டது.
2. பொதுப்பணித்துறையினரால் செயலாக கல்லூரியில் நிர்வாகக்கட்டடம் வெள்ளையடித்து, பெயிண்ட் செய்யப்பட்டது
3. பொதுப்பணித்துறையினர் பெண்கள் விடுதிக்குத்தார் சாலை அமைத்துக் கொடுத்துள்ளது.
4. பெண்கள் விடுதிக்குச்செல்லும் பாதைகளில் நிழல்தரும் மரங்கள் 30 நடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

5. கல்லூரியின் தேர்ச்சி சதவீதம் தொடரந்து 100% மாக இருந்து வருவது எங்களைப் பூரிப்படையச்செய்யும் பெருமைகொள்ளத்தக்க செய்தியாகும் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

Scanned with CamScanner

ஆங்கிலத்துறை பொறுப்பாசிரியராக திருமதி அ.நூர்ஜஹான் அவர்கள் பணியாற்றி வருகிறார். கௌரவ விரிவுரையாளர் வராதபோது திருமதி அ.தேவகி அவர்கள் உயிரியல் துறைக்குப் பொறுப்பாசிரியராகச் செயலாற்றினார். சமூகப்பயனுள்ள ஆக்க வேலைப்பாடத்திற்கு திருமதி அ. தேவகி அவர்களுக்கும் கௌரவ விரிவுரையாளர் திரு.ஆர்,குணசேகரன் அவர்களும் பொறுப்பேற்று அவர்தம் பணியினைச்சிறப்பாக செய்து முடித்துள்ளனர். மேற்படி உபரிப்பணியினை இன்முகத்துடன் ஏற்று கடைமைஉணர்வுடன் செய்து முடித்து எம் பேராசிரியப் பெருமக்களுக்கு என் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## பணியிடைப்பயிற்சி

பேரா. மு. கந்தசாமி வரலாற்றுத்துறை, பேரா. வெ.கலைசெல்வி, தமிழ்த்துறை ஆகிய இருவரும் ஜனவரி 10 முதல் ஜனவரி 30 வரை பாரதிதாசன் பல்கலைக்கழகத்தால் நடத்தப்பெற்ற புத்தொளிப்பயிற்சியில் கலந்துகொண்டன. மேற்கண்ட இருவரும் 2003 டிசம்பரில் பாரதியார் பல்கலைக்கழகம் நடத்திய Research proposals by the college Teachers என்ற இரண்டுநாள் கருத்தரங்கிலும் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். திரு. சா. மணிவண்ணன் கல்லூரி நூலகர் பாரதியார் பல்கலைக்கழகம் நடத்திய புத்தொளிப்பயிற்சியில் 02-03-2004 - 29-03-2004 ஆகிய நாட்களில் கலந்து கொண்டார்.

## ஜே.கே.கே. சம்பூரணியம்மாள் அறக்கட்டளை

திரு. ஜே.கே.கே. முனிராஜ் அவர்களின் குடும்பத்தினர் ஜே.கே.கே. சம்பூரணியம்மாள் அறக்கட்டளை நிறுவி அவ்வறக்கட்டளையில் இருந்து கிடைக்கக்கூடிய வருமானத்தில் பி.எட்., மாணவர்களில் பல்கலைக்கழகத்தேர்வில் உளவியியல் பாடத்தில் முதல் மற்றும் இரண்டாம் இடம்பெற்ற மாணவர்களுக்கு பல ஆண்டுகளாக பரிசு வழங்கி வருகின்றனர். இத்தருணத்தில் இவ்வறக்கட்டளையை நிறுவிய ஜே.கே.கே. குடும்பத்தினருக்கு நன்றியைத்தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆசிரியப்பணி அறப்பணி : அதற்கே உன்னை அர்ப்பணி என்ற பொன்மொழிக்கேற்ப கல்விப்பணியில் தம்மை முழுமையாய் அர்பணித்து நாட்டின் வருங்காலச்சிற்பிகளாய் ஆசிரியர்களை உருவாக்கும் பணியைச் செய்துவரும் எமது பேராசியப்பெருமக்களுக்கும் கல்லூரி வளர்ச்சிக்கு உறுதுணையாய் நிற்கும் அலுவலக அன்பர்களுக்கும், அன்புசார் பெற்றோர்களுக்கும், மாணவ கண்மணிகளுக்கும் எனது உளங்கனிந்த நன்றிகளை உருத்தாக்கி ஆண்டறிக்கையை நிறைவுசெய்கிறேன்

Scanned with CamScanner

## முயற்சிசெய்..

விஞ்ஞானத்தின்
விளைவுகளால்
சோம்பேறியாக்கப்பட்ட
இளைஞனே!
நீ முயற்சி செய்
கூட்டை உடைத்து
காட்டைச் சுற்ற வரும்
வண்ணத்துப்பூச்சி போல்....

முட்டையில் முட்டி மோதி
சிறகு விரிக்கத் துடிக்கும்
குஞ்சுகளைப்போல்...

மண்ணில் விதைத்த
விதைகளெல்லாம் முட்டி
முளைவிடுவதை போல்..

தினமும் மறைந்தாலும்
மீண்டும் மீண்டும் வந்திருக்கும்
கதிரவனைப்போல்...

முயற்சி செய்தால்
தேய்பிறையாயிருக்கும்
உனது வாழ்க்கையும் ஒருநாள்
பௌர்ணமியாகும்.. முயற்சிசெய்

## ஏக்கம்

இனி ...
ஒரு நிமிடமாவது
உயிர்வாழமாட்டோமா என
கடைசி நிமிடத்தில்
ஏங்குமோரு
தூக்குதண்டனைக் கைதிபோல்
ஏங்கியிருக்கிறேன்
நாளும்-பல
இடங்களில்...

இராசமோகன்தாஸ்
சுழல் எண்.69



## THREE THINGS

*Three things to respect*
*old age, religion, and law*

*Three things to love*
*Purity, Honesty and Hard work*

*Three things to admire*
*Beauty, Intellect and character*

*Three things to cultivate*
*Courage, carefulness and contentment*

*Three things to maintain*
*promise, friendship and affection*

*Three things to avoid*
*smoking, drinking and gambling*

*Three things to control*
*Tongue, temper and temptation*

*Three things to watch*
*Speech, behaviour and action*

*Three things to prevent*
*laziness, falsewood, and slang.*

*-K. Vidya*

Scanned with CamScanner

## வாரிசு

இரத்தத்தை வியர்வையாக்கி
இதயத்தைஇருபம்பாக்கி
உழைப்பை உறுதியாக்கி
உருவாக்கி விட்ட உள்ளங்களை
உருக்குலைய வைக்கும் நிலையில்
முதியோர் இல்லத்தில்
முடக்கி வைப்பதல்ல வாரிசு!

காலம் முழுவதும் காப்பாற்றி,
கண்நிறைவான வாழ்க்கையை
கொடுத்தவர்களை
கண்டவர்களிடம் கையேந்த
வைப்பதல்ல வாரிசு!

வறுமையை வெறுமையாக்கி
பசியை இல்லாமையாக்கி
ஏழ்மையைப் பொய்யாக்கி
வாழக்காரணமானவர்களை
துச்சமாக ஒதுக்குவதல்ல வாரிசு!



கடும்குளிரிலிருந்தும்
கடும் வெயிலிருந்தும்,
கண்போல் பாதுகாத்தவர்களை
மீண்டும்
கடும் குளிரில், கடும் வெயிலில்
தள்ளுவதல்ல வாரிசு!

இது என் பிள்ளை
இது என் வாரிசு என
இனிமையாகக் கூறியவர்களை
இது என் தாய். தந்தை என
கூற வெட்கப்படுவதல்ல வாரிசு!

மனம் குளிர நடந்து கொள்ளாவிட்டாலும்
மனம் கோணாமல் நடந்து
மதிப்புத் தந்து காக்கிறார்களே
அவர்களே வாரிசு!

- ப.ராமலிங்கம்
சுழல் எண். 57

## புதிய சரித்திரம்

புத்தாடை உடுத்த புதியவனாய் இரு!
புது சாதனை படைத்திட புதிய மனிதனாக இரு!
புது கவிதை இயற்றிட புத்தகம் படிப்பவனாக இரு!
புது உலகம் படைக்க புதுமை மலராக இரு!
புது பூமியை படைக்க புதிய பூந்தென்றலாக இரு!
பூமிக்குள் போகும் முன்- நீ
புதிய சரித்திரம் படைத்துவிடு!



- இ. முருகன்
சுழல் எண்.28

## பலன்கள்

வாழ்ந்து பார்
வாழ்க்கையின்
அர்த்தம் புரியும்!

முயற்சித்துப்பார்
முன்னேற்றத்தின்
சுவடுகள் தெரியும்!!

ஆராய்ந்து பார்
அறிவுக்கண்
அகல விரியும்

பயந்து பார்
மனசாட்சியின்
மகத்துவம் புரியும்

சந்தித்துப்பார்..
சவால்கள்
சாமான்யமாய்த் தெரியும்

பரீட்சித்துபார்...
உறவுகளின்
உண்மைமுகம் விளக்கும்!

நேசித்துப்பார்
மனித நேயத்தின்
மகத்துவம் புரியும்!

- க.கலைவாணி
சுழல் எண்.27

Scanned with CamScanner

# FACE (I) THE PUZZLES

1. One day the teacher asks this simle Question : " Is it correct to say Seven and five is thirteen - (or) Seven and five are thirteen?
2. How Can 2 and 1 make 4?
3. How can you use Seven 4's to make 100?
4. Here is a fast disappearing word. It has nine letters. If you take away six letters only one will be left what is the word?
5. How can you divide 12 in half and get 7?
6. What letters is always nine inches long?
7. Your bed and light switch are 12 feet apart. How can you switch off the light and get into bed before the room is darK?
8. What has three feet and can't walk?
9. When reshu asked her aunt when she was born, her aunt replied" If you write the year of my birth on a sheet of paper, then turn the paper upside down the date will be the same" can you figure what year Reshu's aunt was born?
10. Draw six vertical lines

I I I I I I by adding 5 more, make nine

<u>Answers</u>

1. Both are wrong Ans ." Seven and five are 12 not 13"

2. $2^2$

3

```
  44
  44
   4
   4
   4
 ---
 100
```

4. TELEPHONE Take away TELEPH and ONE is left.

5.Use Roman numerals : XII = 12

Take half ~~XII~~ and get VII(7)

6. Y, which is 1/4 of the word YARD, which equals 36 inches: Thus 1/4 of 36=9 Y=9 inches

7. Go to bed in day time

8. A yard stick, 9. The year 1881, 10. NINE ( add 5 lines to get NINE)

Scanned with CamScanner

# உலகில் மிகப்பெரியவைகள்


| | |
|---|---|
| 1. உலகிலேயே மிகப்பெரிய மலர் | - அமோர்போபாலஸ் |
| 2. உலகிலேயே மிக உயரமான மரம் | - செஞ்செக்குவாயா |
| 3. உலகிலேயே மிக பருமனான மரம் | - பெருஞ்செக்குவாயா |
| 4. உலகிலேயே மிகப்பெரிய செயற்கைக்காடு | - கைங்காரோ ராஜ்யக்காடு |
| 5. உலகிலேயே மிகப்பெரிய நூல்நிலையம் | - லெனின் நூல் நிலையம்(ரஷ்யா) |
| 6. உலகிலேயே மிகப்பெரிய பூங்கா | - எல்லாஸ்டோன் அமெரிக்கா |
| 7. உலகிலேயே மிகப்பெரிய மிருககாட்சி சாலை | - க்ருகர் நேஷனல் பார்க் தென்னாப்ரிக்கா |
| 8. உலகிலேயே மிகப்பெரிய பிரயாணக்கப்பல் | - க்வின் எலிசபெத் |
| 9. உலகிலேயே மிகப்பெரிய விமாணம் | - கோலக் சிசி 54 அமெரிக்கா |
| 10 உலகிலேயே மிகப்பெரிய கடிகாரம் | - கால்கேட்-பிக்பென் |
| 11. உலகிலேயே மிகப்பெரிய சர்ச் | - செயின்ட் பீட்டர்ஸ் சர்ச் வாடிகன் |
| 12. உலகிலேயே மிகப்பெரிய அரண்மனை | - வாடிகன் நகரில் உள்ள அரண்மனை |
| 13. உலகிலேயே மிகப்பெரிய சிலை | - சுதந்திரதேவி சிலை அமெரிக்கா |
| 14. உலகிலேயே மிகப்பெரிய உயரமான கட்டிடம் | - சியர்ஸ் டவர் சிகாகோ |
| 15. உலகிலேயே மிகப்பெரிய சினிமா தியேட்டர் | - ரேடியோ சிட்டி மியூசிக் ஹால் நியூயார்க் |
| 16.உலகிலேயே மிகஉயரமான கோபுரம் | - ரேடியோ டெலிவிஷன் கோபுரம் நியுமெக்சிகோ |
| 17. உலகிலேயே மிக நீளமான அணை | - ஃபோர்ட்பெக் |
| 18. உலகிலேயே மிகப் பெரிய எரிமலை | - கொடபாக்ஸி எரிமலை |
| 19. உலகிலேயே நிளமான தொங்குபாலம் | - வெராஸானோ ரேரோஸ் அமெரிக்கா |
| 20. உலகிலேயே மிகப் பெரிய நகரம் | - டோக்கியோ ஜப்பான் |

- க.கலைவாணி
சுழல் எண்.27

Scanned with CamScanner

## இளைஞர்கள்

இலையுதிர் கால
மரங்கள் அல்ல நாங்கள்!
இந்தியதாயின் துயர்துடைக்கும்
கரங்கள் நாங்கள்!
வெறுமனே சுற்றித்திரியும் - உயிர்ப்
பிணங்கள் அல்ல நாங்கள்
வெற்றியை நோக்கி செல்லும்
கணங்கள் நாங்கள்
காதலில் விழ்ந்து மட்டுமே
களித்திருப்பவர் அல்ல நாங்கள்!
காலங்களை சோலையாக்கி
செழிப்படையச் செய்வார்கள் நாங்கள்!
மகிழ்ச்சிக் கடலில் மட்டுமே
முத்தெடுப்பவர் அல்ல நாங்கள்!
மாபெரும் சாதனைகளையும்
தத்தெடுப்பவர்கள் நாங்கள்!
துன்பத்திலே தோய்ந்து
வீழ்ந்து கிடப்பவர்கள் அல்ல நாங்கள்!
துள்ளியெழும் மான்களாய்
வாழ்ந்து காட்டுபவர்கள் நாங்கள்!



தா.வனிதா
சுழல் எண்.74

---

## பிரிவின் பிடியில்

தி.சந்தானலட்சுமி
சுழல் எண்.9

இந்த கல்லூரி வானில்
இன்ப பல்லவி பாடும்
சங்கீத மேகங்களாய்
சங்ரமித்திருந்தோம்!..
கல்விப்பயணம் முடிந்து
பிரிவின் பிடியில்
சிக்கித் தவிக்கும்
சிறகுகளாய்
மண்ணைக் கொஞ்சும்
சிறகுகளாய் இப்போது
மாறிப்போனோம்!...
நட்பு மலைச்சாரலில்
நன்றாய் நனைந்தோம்!..
எங்கோ! பிறந்த
நாமெல்லாம் இங்கே
ஒன்றாய் இணைந்தோம்!..
ஒரு நண்பனுக்கு வலி
என்றால்
ஓராயிரம் உயிர்கள்
துடிக்கக்கண்டோம்!..
உண்ணும் உணவை நாமெல்லாம்
பன்மையாய் பரிமாறி
பங்கிட்டு மகிழ்ந்தோம்!...
பாச உணர்வுகளால்
பாடப்புத்தகங்களுக்கு
அப்பாற்பட்ட
அழகிய படைப்பு
இது
எண்ணற்ற ஆண்டுகள்
ஆனாலும்
அழியாத நினைவு சிற்பம்!..
காற்றைக்கூட
கரங்களில் பிடித்து
கவிதையாய் மொழி
பெயர்த்தோம்!.
உள்ள கோபுரத்தில்
உணர்வுகளாய் நித்தம்
நட்பு தீபத்தை
நன்றாய் ஏற்றினோம் !..
இப்போது
பிரிவெனும் கத்தி நம்மை
சூழ்ந்து விட
சுத்தி நிற்கிறது
பிரிகிறோம் எண்ணுகையில்
இயங்க துடிப்பது
இமைகள் மட்டுமல்ல!..
இதயமும் தான்
கடக்க மறப்பது
கால்கள் மட்டுமல்ல
காடிகாரமும் தான்!...
பிரிகிறோம் எண்ணுகையில்
பிரிய மறுப்பதோ! நாம்
பூ விழிகள் !...
அழக துடிப்பதோ?
நாம் அழகிய கண்கள் !...
காலத்தின்
கட்டாயத்தில் நாம்
பிரிந்தாலும்
பழகிய பாச உணர்வு
கண்களில் காட்சிகளாய்
கண்ணின் நித்தம்
அரங்கேறும்!..
இயங்க துடித்த இமைகள்
புதிய இனிமை பெறும்

Scanned with CamScanner



## என் இனிய தோழியே...

எனக்கு துன்பங்கள் வந்தால் நான் கலங்குவதில்லை
காரணம் பகிர்ந்து கொள்ள நீ இருக்கிறாய்!
சந்தோஷங்கள் வந்தாலும் நான் மட்டும் மகிழ்வதில்லை
காரணம் அதை நூறு மடங்காக்க நீ இருக்கிறாய்
வெற்றிகள் வந்தால் மகிழ்ச்சி அடைய நீ
தோல்விகள் வந்தால் ஆறுதல் தர நீ
பிறரின் பழிக்கு நான் அஞ்சியதே இல்லை
காரணம் தைரியம் சொல்லி அரவணைக்க நீ
என் வாழ்வின் கடைசி வரை மட்டும் இல்லை
நான் எடுக்கும் அத்தனை ஜென்மத்திலும்
நீ எனக்கு வேண்டும் தோழியாக மட்டும்
காரணம் பணம், வசதி, சொந்தம், திருமணம்
எவற்றாலும் பிரிக்கமுடியாத
இனிய உறவு நட்பு, நட்பு
தூய நட்பு மட்டுமே!...

-ச.நூர்ஜஹான்
சுழல் எண்.15

---

## பொன்மொழிகள்

1. விட்டுக்கொடுப்பவர்கள் கெட்டுப்போவதும் இல்லை
கெட்டுப்போகிறவர்கள் விட்டுக்கொடுப்பதும் இல்லை.

2. புண்படுத்தும் உண்மைகளை விட
குணப்படுத்தும் பொய்கள் மேல்

3. எதிர்பார்ப்பு குறைவாக இருக்கும் போது
ஏமாற்றமும் குறைவாக இருக்கும்

4. தோற்றவனிடம் கேட்டால்
வெற்றிக்கு வழிசொல்வான்

5. தோற்றவுடன் துவண்டு விடாதே
ஜெயித்தவுடன் வீராப்படையாதே

6. வெற்றி வெற்றிபெறுவதற்கு
தோல்வி கற்றுக்கொள்வதற்கு

7. கண்டிப்புடன் நடந்துகொண்டால்
தண்டிக்க வேண்டிய அவசியம் இல்லை

-க.ரமேஷ்
சுழல் எண்.58

Scanned with CamScanner

# THE ESSENCE OF LIFE


Life is a Challenge - meet it
Life is a gift - Accept it
Life is a adventure - dare it
Life is a sorrow - Overcome it
Life is a tragedy - Face it
Life is a duty - perform it
Life is a game - play it
Life is a mystery - Unfold it
Life is a song - sing it
Life is a opportunity - Take it
Life is a journey - Complete it
Life is a promise - fulfil it
Life is a love - Discover it
Life is a beauty - Praise it
Life is a truth - Realise it
Life is a Struggle - Fight it
Life is a Puzzle - Solve it
Life is a goal - Achieve it
Life is a bless - Taste it
Life is a Milestone - keep it in view

- N. Rajeswari

Scanned with CamScanner


## மாணவர் பேரவை செயலர்கள்


அ.அந்தோனிபால்ராஜ்
மாணவர்தலைவர்


ந.அஷோக்குமார
பாடி வாழ்க்கை செயலர்


கி. காமராஜ்
நூலகத்துறை செயலர்


ஆ.அமல்ராஜ்
ஆசியர் மன்றச்செயலர்


மா.லட்சுமணன்
உயிரறிவியல் துறைசெயலர்


த.சுப்பிரமணியன்ரவி
தமிழ்த்துறைச்செயலர்


ஜி.சிந்தியா
பதிவேட்டுத்துறைச்செயலர்



ஜி.கவிதா
பொருளறிவியல் துறை
செயலர்


கே.எம்.கல்பனா
கைக்கலைத்துறைச்
செயலர்


Scanned with CamScanner




**கே.கலையரசி**
மாணவர் துணைத்தலைவர்



**டி.பி.சாம்ராஜேஷ்**
கேள்விக்காட்சிதுறை
செயலர்



**ஜெ.வெங்கடபிரசாத்**
இலக்கிய மன்ற துணை
செயலர்




**கே.முத்துக்கண்ணு**
கல்லூரி மலர் செயலர்



**அ.சப்தகிரிவாசன்**
விளையாட்டுத்துறைச்
செயலர்



**ஆர். கலைமணி**
ஆங்கிலத்துறை செயலர்



**வ.கருப்பசாமி**
கணிதத்துறை செயலர்



**ப.தங்கவேல்**
வரலாற்றுத்துறை செயலர்

Scanned with CamScanner